



admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்






| Vol: 04 | Issue: 004 | 4 Pages | 04.08.2026 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 04 | இதழ்: 004 | 4 பக்கங்கள் | 04.08.2026 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**உரனென்னும்தோட்டியான்ஓரைந்தும்காப்பான்**
**வரனென்னும் வைப்பிற்கோர் வித்து**

**விளக்கம்:**
**அறிவு என்னும் கருவியினால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கிக் காக்க வல்லவன், மேலான வீட்டிற்கு விதை போன்றவன்.**


## தென் கொரியாவில் வரலாறு காணாத வெப்பம்!



சியோல், ஆக. 4

தென் கொரியாவில் 122 ஆண்டுகளில் இல்லாத அளவாக புதிய உச்சமாக 42.5 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது. தென் கொரியா முழுவதும் கடந்த சில நாட்களாக தீவிர அனல் காற்று வீசி வருகிறது. இந்த நிலையில்,நாட்டின்வரலாற்றிலேயேஇல்லாதஅளவிற்கும், 122 ஆண்டுகளில் இல்லாத அளவாக புதிய உச்சமாக 42.5 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது. தென் கொரிய வானிலை ஆய்வு மையத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி, நாட்டின் தென்கிழக்கு பகுதியிலுள்ள யாங்சான் நகரில் நேற்று (செவ்வாய்க்கிழமை),பிற்பகல் 1:26 மணியளவில் இந்த வரலாறு காணாத வெப்பம் பதிவாகியுள்ளது. கடந்த 1904ம் ஆண்டு நவீன வானிலை கண்காணிப்பு தரவுகள் சேகரிக்கத் தொடங்கப்பட்டதில் இருந்து பதிவான மிக அதிகபட்ச வெப்பநிலை இதுவாகும். யாங்சான் நகரில் தொடர்ந்து ஐந்தாவது நாளாக வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸைத் தாண்டி பதிவாகி வருவது குறிப்பிடத்தக்கது. வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்து வருவதால், தென் கொரியாவின் 20 க்கும் மேற்பட்ட உள்ளூர் மாவட்டங்களுக்கு அரசு அவசர கால அனல் காற்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அறிவுறுத்தப்பட்ட வழிமுறைகள்பின்வருமாறு: அனல் காற்றின் தீவிரம் குறையும் வரை பொதுமக்கள் திறந்தவெளி வேலைகள் மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும். குளிரூட்டப்பட்ட வீடுகள், வணிக வளாகங்கள் அல்லது அரசு அமைத்துள்ள பொது குளிர்விப்பு மையங்களில் மக்கள் இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். கடுமையான வெப்ப எச்சரிக்கை காரணமாக கொரியாவின் தொழில்முறை பேஸ்பால் லீக் போட்டிகள் ரசிகர்களின் பாதுகாப்பு கருதி ரத்து செய்யப்பட்டுள்ளன. பசிபிக் மற்றும் திபெத்திய உயர் அழுத்த மண்டலங்கள் கொரிய தீபகற்பத்தை ஒரு மூடி போலமூடி, வெப்பக்காற்றை வெளியேறவிடாமல்தடுத்துவைத்திருப்பதே இந்த அதீத வெப்பத்திற்கு முக்கிய காரணம் என வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். மனித நடவடிக்கைகளால் ஏற்படும் காலநிலை மாற்றம் மற்றும் எல் நினோ தாக்கம் ஆகியவை உலகளவில் இத்தகைய கடுமையான வானிலை மாற்றங்களை அடிக்கடி உருவாக்குவதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

## நடுவானில் விமானத்திற்கு 300 அடி தொலைவில் நெருங்கிய பறக்கும் தட்டு; விமானி அதிர்ச்சி



லண்டன், ஆக. 4

இங்கிலாந்தில் நடுவானில் விமானம் வந்தபோது, 300 அடி தொலைவில் பறக்கும் தட்டு நெருங்கி விமானிக்கு அதிர்ச்சி ஏற்படுத்தியது. இங்கிலாந்து நாட்டின் லண்டன் நகரில் கேட்விக் விமான நிலையத்தில் ஏர்பஸ் ஏ319 என்ற பயணிகள்விமானம்தரையிறங்கவேண்டி இருந்தது. இதற்காக கேட்விக் பகுதிக்கு தெற்கே 7 மைல்கள் தொலைவில், சசெக்ஸ் கவுன்டி பகுதியில் ஹேங்கிராஸ் அருகே நடுவானில் பறந்து வந்து கொண்டிருந்தது. விமானம் தரையிறங்க சில நிமிடங்கள் இருக்கும்போது, அந்த சம்பவம் நடந்தது. திடீரென மர்ம பொருள் ஒன்று மெதுவாக மேலே எழும்பி வந்தது. விமானிக்கு அதிர்ச்சி அளிக்கும் வகையில், விமானத்தின் வலது இறக்கை பகுதியருகே வட்ட வடிவிலான அந்த பறக்கும் தட்டு 100 முதல் 300 அடி இடைவெளியில் விமானத்திற்கு மிக நெருங்கிய தொலைவில் வந்துள்ளது. தூரத்திலேயே விமானி அதனை கவனித்து விட்டார். வேறு திசைக்கு செல்வதற்கு ஏற்ப விமானமும், முன்பே திசை திருப்பப்பட்டு விட்டது. இதனால், பெரிய அளவில் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. எனினும், விமானம் தரையிறங்கியதும் இதுபற்றி உயரதிகாரிகளுக்கு விமானி தகவல் தெரிவித்து உள்ளார். அது ஒரு வட்ட தட்டு அல்லது பறக்கும் தட்டு அல்லது டிரோனாக இருக்க கூடும் என அதிகாரிகளிடம் கூறியுள்ளார். அது, விமானத்திற்கு எதிர் திசையில் மிக நெருக்கத்தில், விமானத்தின் மட்டத்திற்கு இணையாக அதே மட்டத்தில் வந்தது. வலது இறக்கை பகுதியில் கடந்து சென்றது என கூறியுள்ளார். அந்த தட்டின் வெளிப்புற விளிம்பு பகுதிகளில் கருப்பு நிறத்தில் அடையாளங்கள் இருந்தன. அது நவீன டிரோனாக இருக்க கூடும். ஆனால், அதன் சரியான அடையாளமோ அல்லது எந்த பகுதியில் இருந்து வந்தது என்றோ தெரியவில்லை என கூறியுள்ளார். அந்த பகுதியில் வேறு விமானிகளும் இல்லை. இதனால், அதனைவேறுயாரும்பார்க்கவுமில்லை. அந்த மர்ம பொருள் எந்த வகையானது என தெரிய வரவில்லை. எனினும் விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு அதிகாரிகள் எச்சரிக்கை அறிவிப்பை வெளியிட்டு உள்ளனர். இதுபற்றி இங்கிலாந்தின் ஏர்பிராக்ஸ் என்ற தனியார் அமைப்பு தீவிர கவனம் கொண்டு நிலைமையை பற்றி கண்காணித்து, தீர விசாரித்து வருகிறது.

## எதிர்க்கட்சிகள் கடும் அமளி: நாடாளுமன்ற இரு அவைகளும் அடுத்தடுத்து ஒத்திவைப்பு

புதுடெல்லி, ஆக. 4

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் முதல் நாளில் இருந்தே அமளி நீடித்துவருகிறது.11வதுநாளானஇன்றும்மக்களவைமற்றும்மாநிலங்களவையில் மீண்டும் கடும் அமளி ஏற்பட்டது. நீட் முறைகேடு விவகாரம், மாணவர் போராட்டங்கள் மீதான போலீஸ் நடவடிக்கை, ராமர் கோவில் நன்கொடை விவகாரம் உள்ளிட்ட பிரச்சினைகளை எழுப்பி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முழக்கமிட்டனர். இதன் காரணமாக அவை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. தொடக்கத்திலேயே ஏற்பட்ட அமளியால் மக்களவை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கோஷங்களால் சுமுகமாக அலுவல்கள் நடைபெறவில்லை. தொடர் அமளியால் மாநிலங்களவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. இதற்கிடையே, இன்று முக்கிய மசோதாக்களை நிறைவேற்றும் முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளது. மக்களவையில் இந்திய புள்ளியியல் நிறுவனம் மசோதா, 2026 மற்றும் வங்கியாளர்களின் ஆவண சான்று மசோதா, 2026 ஆகியவை அறிமுகப்படுத்தப்பட உள்ளன. மாநிலங்களவையில் பிறப்புஇறப்பு பதிவுகள் (திருத்தம்) மசோதா, 2026 மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை (திருத்தம்) மசோதா, 2026 ஆகியவைதாக்கல் செய்ய திட்டமிட்டுள்ளது. மேலும், வெளிநாட்டு நிதியுதவி ஒழுங்குமுறை (FCRA) திருத்த மசோதாவும் தாக்கல் செய்யப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது. நாடாளுமன்றக் கூட்டத்தொடருக்கு இன்னும் சில வேலை நாட்கள் மட்டுமே எஞ்சியுள்ள நிலையில், அவையில் தொடர்ந்து அமளி நீடித்து வருகிறது

# தீரன் சின்னமலையின் வீரத்தையும் தியாகத்தையும் போற்றுவோம் முதல்அமைச்சர் விஜய்

சென்னை, ஆக. 4

முதல்அமைச்சர் விஜய் தனது எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

ஆங்கிலேயரின் அடக்குமுறையை எதிர்த்து, விடுதலை முழக்கமிட்ட சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளில் அவரது வீரத்தையும் தியாகத்தையும் போற்றி வணங்குகிறேன்.

கிழக்கிந்திய கம்பெனியின் வரி வசூலையும், அந்நிய ஆதிக்கத்தையும் எதிர்த்ததோடு, தாய்நாட்டின் விடுதலைக்காக தனது இன்னுயிரைத் தியாகம் செய்த தீரன் சின்னமலையின் வீரம்,





தன்னம்பிக்கை, தேசப்பற்று மற்றும் தியாக உணர்வு காலம் கடந்தும் நம் தலைமுறைகளை ஊக்குவித்து வருகிறது.

சுதந்திரக்காற்றைச்சுவாசிக்கத் தன் உயிர் மூச்சைக் கொடையாகக் கொடுத்த மாவீரனின் புகழ் என்றென்றும் நிலைத்திருக்கட்டும்!

இவ்வாறுஅதில்கூறியுள்ளார்.

## தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரிய குடியிருப்பு மீனவர் குடியிருப்பு திட்டப்பகுதி குடியிருப்பு பகுதியில் மர்மமான முறையில் வாலிபர் பிணம்



புதுவண்ணாரப்பேட்டைதமிழ்நாடுநகர்ப்புற மேம்பாட்டு வாரிய குடியிருப்பு மீனவர் குடியிருப்பு திட்டப் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பில் இருந்து A கேட்டகரி சரித்திர பதிவேடு விழுந்து பலியான தகவல் ஆனால் போலீஸ் விசாரணையில் கொலையா போதையில் தவறி விழுந்தாரா என பிரேத பரிசோதனையில் அறிக்கை வரும் என்று தகவல்

சென்னை புது வண்ணாரப்பேட்டை பகுதியைச் சேர்ந்த நரேஷ் குமார் வயது 24 இவர் மீது இரண்டு கொலை வழக்கு மற்றும் 15க்கு மேல அடிதடி வழக்குகள் உள்ளது இந்நிலையில் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரிய குடியிருப்பு மீனவர் குடியிருப்பு திட்டப்பகுதி அடுக்குமாடி குடியிருப்பில் இளைஞர் ஒருவர் உயிரிழந்து கீழே கிடப்பதாக போலீசாருக்கு கிடைத்த தகவலின் பெயரில் போலீசார் பிரதத்தை வந்து ஆய்வு செய்தபோது புது வண்ணாரப்பேட்டை H5 காவல் நிலைய ஏ கேட்டகிரி ரவுடி நரேஷ் குமார் என தெரிய வந்தது மேலும் காரணமாக மேலே இருந்து தள்ளிவிட்டு கொலை செய்யப்பட்டாரா அல்லது குடிபோதையில் தவறி விழுந்தாரா எப்படி உயிர் இழந்தார் என மருத்துவர்கள் பிரேத பரிசோதனை பெரியபுரம் எனது விசாரித்தனர் மேலும் நரேஷ் குமார் அவர்களின் பிரேதத்தை முன்னிட்டு அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு உடற்கூறு ஆய்வுக்கு அனுப்பி வைத்து மீன் பிடித்து துறைமுக போலீசார் வழக்கு பதிவு செய்து இந்த மர்ம மரணம் கொடுத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் ரவுடி மேலே இருந்து கீழே விழுந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## அம்பத்தூரில் நடைபெற்ற பள்ளி ஆண்டு விளையாட்டு போட்டியை துவக்கி வைத்த உலக தடகள வீராங்கனை மாணவர்களுக்கு இணையாக மாணவிகளும் களத்தில் இறங்கி போட்டி




சென்னை, ஆக. 4

சென்னைஅம்பத்தூர்புதூரில்உள்ளசேதுபாஸ்கராபள்ளியின் 39 ஆவது ஆண்டு விளையாட்டு தினம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக உலக தடைகளை வீராங்கனையும்தடகளபயிற்சியாளருமானசாந்திசவுந்தரராஜன், ஆவடி மாநகர காவல் மக்கள் நலன்

உதவி ஆணையர் சம்பத், மாவட்ட இளைஞர் நலன் மட்டும் விளையாட்டுதுறைஅதிகாரிஅருள்போஸ்,தேசியகூடைப்பந்து வீரர் ஸ்ரீநாத், மிஸ்டர் ஆசியா ஆணழகன் புருஷோத்தமன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். நடைபெற்றதடகளபோட்டியில்1000க்கும்மேற்பட்டமாணவ மாணவிகள் பங்கேற்றனர்.100, 200 மீ , 800 மீ ஓட்டம், நீளம் தாண்டுதல்உயரம்தாண்டுதல்உள்ளிட்டதடகளமும்கைப்பந்து கால் பந்து த்ரோபால் ஒழித்த போட்டிகளும் நடைபெற்றது. நிகழ்ச்சியை பள்ளியின் தாளாளர் முனைவர் சேது குமணன், உலக தடகள வீராங்கனை சாந்தி ஆகியோர் கொடியசைத்து போட்டியைதுவக்கிவைத்தனர்.பின்னர்போட்டிகள்தொடர்ந்து நடைபெற்றது.

சீனியர் பெண்களுக்கான 100 மீட்டர் ஓட்டப்பந்தய போட்டியை தடகள வீராங்கனை சாந்தி சௌந்தரராஜன் மற்றும் பள்ளிதாளாளர்சேதுகுமணன்ஆகியோர்தொடங்கிவைத்தனர். பின்னர் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பள்ளி தாளாளர் சேது குமரனும் உலக தடங்கல வீராங்கனை சாந்தி சௌந்தரராஜன்ஆகியோர்பதக்கம்அணிவித்துசான்றிதழ்களை வழங்கினர்.

நிகழ்ச்சியில் பள்ளியில் முதல்வர் செல்வகுமார் உள்ளிட்ட பள்ளி ஆசிரியர்கள் மாணவர்களின் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

## ஜிஎஸ்டி அதிகாரிகளை கண்டித்து சவுகார்பேட்டையில் 52 வணிகர் சங்கங்கள் போராட்டம் திறந்திருந்த கடைகளை மூடக் கூறியதால் போலீசார் எச்சரிக்கை



சென்னை, ஆக.4

சென்னை சவுகார்பேட்டை பகுதியில் ஜிஎஸ்டி அதிகாரிகளின் நடவடிக்கையை கண்டித்து மூன்றாவது நாளாக 52 வணிகர் சங்கங்கள் சார்பில் போராட்டம் நடைபெற்றது.

முன்னதாக, மின்ட் பகுதியில் உள்ள ஒரு எவர்சில்வர்கடையில்ஜிஎஸ்டிஅதிகாரிகள் சோதனை நடத்தியபோது, சிசிடிவி கேமராக்களைஅணைத்ததுடன்,உரிமையாளர்களின் செல்போன்களை பறிமுதல் செய்து அத்துமீறலில் ஈடுபட்டதாக வணிகர்கள்குற்றம்சாட்டினர்.இதையடுத்து வணிகர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பாத்திரக்கடை, ஹார்டுவேர், விளையாட்டுப் பொருட்கள், நகைக்கடைகள் உள்ளிட்ட பல்வேறு வணிக நிறுவனங்கள் அடைக்கப்பட்டிருந்தன. குடோன் தெரு, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, ராசப்பன் தெரு உள்ளிட்ட பகுதிகளில் வணிகர்கள் ஊர்வலமாகச் சென்றனர்.

அப்போது திறந்திருந்த சில கடைகளையும் மூடுமாறு ஊர்வலத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தியதாக கூறப்படுகிறது. இதையடுத்து அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்த போலீசார், போராட்டம் அமைதியான முறையில் நடைபெற வேண்டும் என்றும், கடைகளை மூடுமாறு யாரையும் வற்புறுத்தக் கூடாது என்றும் எச்சரித்தனர். இல்லையெனில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தனர். இதையடுத்து வணிகர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். இந்தச் சம்பவத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. இதற்கிடையில், ஜிஎஸ்டி அதிகாரிகளின் நடவடிக்கை தொடர்பாகஅரசுஉடனடியாகதலையிட்டு, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வணிகர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என வணிகர் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

## அரசு ஸ்டான்லி முதல்வர் டாக்டர் அரவிந்த் துவக்கி வைத்த தாய்ப்பால் விழிப்புணர்வு மனித சங்கிலி 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்று தாய்ப்பாலின் அவசியம் குறித்து விழிப்புணர்வு




சென்னை, ஆக.4

உலக தாய்ப்பால் வாரத்தை முன்னிட்டு, சென்னை ராயபுரத்தில் உள்ள அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் சமூக குழந்தைகள் நல நிலையம் சார்பில் விழிப்புணர்வு மனித சங்கிலி மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சிக்கு அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முதல்வர் மற்றும் டீன் பேராசிரியர் டாக்டர் அரவிந்த் தலைமை தாங்கி, பலூன்களை பறக்கவிட்டு தாய்ப்பால் விழிப்புணர்வு மனித சங்கிலியை துவக்கி வைத்தார். குழந்தைகள் நலத் துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் கணேஷ் முன்னிலை வகித்தார். மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர் ஜோதி குமார், ஆர்.எம்.ஓ. டாக்டர் வனிதா மலர், உதவி பேராசிரியர்கள், முதுநிலை மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் தாய்ப்பால் ஊட்டும் தாய்மார்கள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர். இப்ராஹிம் சாலையில் நடைபெற்ற மனித சங்கிலியில் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு, தாய்ப்பாலின் அவசியம் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சியில் அதன் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். தொடர்ந்து,அரசுஸ்டான்லிமருத்துவமனை மற்றும் வடசென்னை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் சார்பில் தாய்ப்பாலின்முக்கியத்துவத்தைவிளக்கும் புகைப்படக் கண்காட்சி, செல்பி பூத், விழிப்புணர்வு கோலங்கள் உள்ளிட்ட காட்சிகளை டாக்டர் அரவிந்த், டாக்டர் கணேஷ், டாக்டர் ஜோதி குமார், டாக்டர் வனிதா மலர் ஆகியோர் பார்வையிட்டனர். மேலும், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த தாய்மார்களுக்கும், பொதுமக்களுக்கும் தாய்ப்பாலின் அவசியம் குறித்த விழிப்புணர்வு மற்றும் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சி நிறைவில் அனைவரும் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

# லஞ்சம், ஊழல் இல்லாத ஆட்சியை மக்கள் தேர்வு செய்துள்ளனர் - அதிமுகவில் இருந்து விலகி தமிழக வெற்றி கழகத்தில் இணைந்த ராஜேஷ்

அதிமுக வட சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் ராஜேஷ், அதிமுகவில் இருந்து விலகி தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தார். இந்நிலையில், தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களை சந்தித்த ராஜேஷ்,

இந்த நாள் இனிய நாள். நம்முடைய தலைவர் விஜய் அவர்கள் தலைமையை ஏற்று, பொதுச்செயலாளர் ஆனந்த் அவர்களை சந்தித்து கழகத்தில் இணைத்துக் கொண்ட மகிழ்ச்சியான தருணம்.

மக்களுக்கான அரசு, மக்களை நாடி ஒரு அரசு என்ற விஷயத்தில் மக்கள் கொடுத்த தீர்ப்பை வரவேற்கும் விதமாகவும், எதிர்பார்க்கும் விதமாகவும் இன்று மகிழ்ச்சியான, நிறைவான மனநிலையில் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்திருக்கின்றோம்.

தமிழக மக்கள் நம்முடைய எம்ஜிஆர், அம்மா வழியில் நம்முடைய முதலமைச்சர் பணியாற்றும் விதம் அமைந்திருப்பதால், அனைத்து உறவுகளும் சந்தோஷப்படும் வகையில் கண்டிப்பாக வரும் காலம் நன்றாக இருக்கும். அதன் அடிப்படையில் இன்று தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்திருக்கிறோம். தமிழக வெற்றிக் கழக பொதுச்செயலாளர் ஆனந்த், சபாநாயகர், பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதாவ் அர்ஜுனா அவர்களை பார்த்து கழகத்தில் இணைந்திருக்கிறோம். ஏன், எதற்காக அதிமுகவிலிருந்து விலகுகிறீர்கள் என்ற கேள்விக்கு,

செயல்பாடுதான் அதிருப்தி. தலைமை விமர்சிக்க வேண்டுமென்றோ, குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்றோ என்ற தருணத்தில் இல்லை.

நல்ல தலைவர் என்பது வரும் தலைமுறையை வளர வைத்து அழகு பார்ப்பதுதான் நல்ல பண்பு.



மாவட்ட செயலாளர் என்பது நல்ல அங்கீகாரம். எங்களை கேட்காமல் பல நிர்வாகிகளை நியமிப்பது, அந்த மாவட்டத்துக்கான ஓட்டங்கள் கிடைக்காது. அது சரிவர பணி செய்ய முடியாது. அது தவறான வழிகாட்டுதலை ஏற்படுத்தும்.

நல்ல விஷயத்திற்காக இணைந்திருக்கிறோம். கடந்த காலம் கடந்து போகட்டும். ஆர்கே நகர் அம்மாவின் தொகுதி. எங்களின் பணி என்னவென்று மக்களுக்கு நன்றாக தெரியும். ஒரு மாற்றம் தேவை என்பதற்காக மக்கள் அடையாளம் செய்து கொடுத்தார்கள். அந்த மாற்றம் நல்ல மாற்றமாக, லஞ்சம், ஊழல் இல்லாத ஆட்சியாக அடையாளமாக மக்கள் கொடுத்திருக்கிறார்கள். நல்ல அடையாளம் கிடைக்கும் என நம்புகிறோம் என்றார்

# உழவர் பெருமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் போராட்டம் பெருகும்! மு.க. ஸ்டாலின்

சென்னை, ஆக. 4

தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:



காவிரி விவசாயிகளுக்காக எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் தஞ்சையில் திரண்ட கழகம்! உழவர் பெருமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் போராட்டம் பெருகும். காவிரி பெருக்கெடுக்க வேண்டிய ஆடிப்பெருக்கு நாளில் டெல்டா விவசாயிகள் ஆதங்கம் பெருக்கெடுக்கப் போராடி வருகின்றனர். விவசாயப்பெருங்குடிமக்களின் உணர்வுகளை உரக்கச் சொல்லும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற தோழமைக்கட்சித்தலைவர்கள் ஜவாஹிருல்லா, தமிமுன் அன்சாரி, நெல்லை முபாரக் ஆகியோருக்கும், அக்கட்சிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட தோழர்களுக்கும், பல்வேறு விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜூன் 12 வந்து சேர்ந்திருக்க வேண்டிய காவிரி நீர் ஆகஸ்ட் பிறந்தும் வரவில்லை. ஆடி பதினெட்டில் பொங்கி வரும் புதுப்புனலை வரவேற்ற காவிரிக்கரையின் மைந்தர்கள் விவசாய விரோதி விஜய் ஆட்சியின் சோம்பேறித்தனத்தால் சோகத்தில் மூழ்கியுள்ளனர். தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் திறந்து விட மறுக்கும் கர்நாடக அரசைக் கண்டித்து ஒரு வார்த்தை கூட பேசாத முதல்அமைச்சரைத் தமிழ்நாடு இப்போதுதான் பார்க்கிறது. அண்டை மாநிலத்தில் திரைப்படம் ஓடுவதற்காக நம் விவசாயிகளின் வாழ்க்கையையா அடகு வைப்பீர்கள்?

முழுக் கடன் தள்ளுபடி என வாழைப்பழம் போல வாக்குறுதி தந்து வெற்றி பெற்றுவிட்டு, விவசாயிகளை ஏமாற்றிய மோசடி ஆட்சியாக இந்தத் த.வெ.க. ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது. மேகதாது அணை கட்டியே தீருவோம் என அடம் பிடிக்கும் கர்நாடகத்துடன் பேச்சுவார்த்தைக்குச் செல்லத் துடியாய்த் துடிக்கும் தமிழ்நாடு முதல்அமைச்சர் நேற்று கர்நாடகத்தில் நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் பற்றிய செய்திகளைப் பார்த்தாரா? இங்கு அதேபோல் அனைத்துக்கட்சிக்கூட்டம் கூட்ட முதல்அமைச்சருக்கு நேரமில்லையா?

விவசாயிகளைச் சந்திக்காமல் புறக்கணித்துவிட்டு, வேளாண் பட்ஜெட்டைத் திருப்பதிக்குத் தூக்கிக் கொண்டு சென்றால் உங்கள் பாவங்கள் போய்விடுமா? நாக்பூரில் நம் விவசாயிகள் கைது செய்யப்பட்டதற்குக் கூட கண்டனம் தெரிவிக்காமல், கள்ள மவுனம் காக்கிறார் திரையில் தன்னுத்து விவசாயியாக வேடம் தரித்தவர்.

விவசாயிகளை இனியும் வஞ்சிக்காமல் த.வெ.க. அரசு வாக்குறுதியளித்தபடி முழு கடன் தள்ளுபடி செய்ய வேண்டும். குறுவை சிறப்பு நிவாரணத் தொகுப்பு வழங்கி, டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்திட வேண்டும். காவிரியில் தமிழ்நாட்டின் உரிமையைக் காற்றில் பறக்க விடாமல் தீவிரமாகச் செயல்பட வேண்டும். அதுவரை கழகத்தின் போராட்டம் தொடரும்!

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# நடிகை திரிஷாவை அரசியலுக்கு வரவேற்கும் விதமாக ஒட்டப்பட்ட போஸ்டர்கள்




சென்னை, ஆக. 4

தமிழ்திரையுலகில் முன்னணி நடிகையாக இருப்பவர் திரிஷா. 22 ஆண்டுகளுக்கும் மேலாக திரையுலகில் கொடிகட்டி பறந்து வரும் திரிஷா குறித்து சமீபகாலமாக சர்ச்சைகள் அதிகரித்துள்ளன. திரிஷாவின் தனிப்பட்ட வாழ்க்கை மட்டுமின்றி திரையுலக வாழ்க்கை குறித்தும் அவ்வப்போது பரபரப்பு கிளம்பி வருகிறது.

சமீபத்தில் தவெக தலைவரும், முதல்அமைச்சருமான விஜய்யின் பிறந்தநாளையொட்டி அவருக்கு திரிஷா வாழ்த்து தெரிவித்து இன்ஸ்டாகிராமில் வெளியிட்ட புகைப்படம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. மேலும் நடிகை திரிஷா அரசியலில் ஈடுபட தயாராகி வருவதாகவும் இணையதளங்களில் தகவல் பரவியது. இதற்கு அவர் தரப்பில் மறுப்பு தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், மதுரையில் நடிகை திரிஷாவை அரசியலுக்கு வரவேற்கும் விதமாக நகரின் பல்வேறு பகுதிகளிலும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன. அதில் "எந்தவொரு அரசியல் கட்சியும் ஆரம்பிக்கும் முதல் மண் எங்கள் மதுரை... என்றும் மதுரை மீனாட்சி தாய் ஆசிர்வாதத்தால் தமிழக சங்க வரலாற்றில் முதல் முறையாக எங்கள் அக்க திரிஷாவிற்கு தமிழக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட முதல் சங்கம். மதுரை மாவட்டம் திரிஷா நற்பணி மன்றம்" என்று அதில் எழுதப்பட்டுள்ளது. இந்த போஸ்டர்கள் தற்போது சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.

# டம்மி முதல்அமைச்சர்... ஜோக்கர் அமைச்சர்கள்... உதயநிதி ஸ்டாலின் கடும் விமர்சனம்




தஞ்சாவூர், ஆக. 4

மேகதாது அணை கட்டுவதை தடுக்க தவறிய த.வெ.க. அரசை கண்டித்தும், டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட் டங்களாக அறிவிக்க வேண்டியும் தஞ்சை பனகல் கட்டிடம் முன்பு தி.மு.க. சார்பில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சட்டசபை எதிர்க்கட்சி தலைவரும், தி.மு.க. இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் தலைமை தாங்கினார். முதன்மை செயலாளரும், சட்டசபை எதிர்க்கட்சி துணைத்தலைவருமான கே.என்.நேரு வரவேற்று பேசினார்.

ஆர்ப்பாட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

குறுவை பாதிக்கப்பட்டதற்கு டம்மி முதல்அமைச்சர்தான் காரணம். விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் முதல்அமைச்சர் விஜய் இதுபற்றி வாய்திறந்து பேசவில்லை. ஆடி 18ம் நாள் இன்று, ஆடிப்பெருக்கில் ஆறு முழுவதும் தண்ணீர் வழிந்து ஓடும். ஆனால், இப்போது டெல்டா நீர் இல்லாமல் வறண்டு காணப்படுகிறது. "திமுக ஆட்சி இருந்திருந்தல் இந்த நிலைமை ஏற்பட்டிருக்குமா?" நிர்வாகத் திறனற்ற ஒரு டம்மி முதல்அமைச்சரால் இந்த நிலைமை தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டுள்ளது.

கர்நாடகா முதல்அமைச்சர பாக்குறது இருக்கட்டும்.. நம்மஊரு விவசாயிகள முதல்அமைச்சர் விஜய் சந்தித்தாரா?. தயவு செய்து இந்த பக்கம் வந்து விடாதீர்கள் என முதல் அமைச்சர் விஜயிடம் கர்நாடக முதல்மந்திரி கூறி விட்டார். ஆட்சி அமைத்து 3 மாதங்கள் ஆகியும் பாஜக என்ற சொல்லைக் கூட உச்சரிக்காத தைரியசாலி நமது முதல் அமைச்சர் விஜய். கர்நாடகாவில் உள்ள காங்கிரஸை எதிர்த்துப் பேச முதல்அமைச்சருக்கு திராணி இல்லை.

காவிரி விவகாரத்தில் தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்ல. விவசாயிகள் கண்ணீர் வடிக்கக்கூடிய நிலையில் அமைச்சர்கள் சினிமாவிற்கு சென்று கண்ணீர் வடிக்கிறார்கள். ஏதாவது ஒரு பிரச்சினை வந்தால் அதை எப்படி திசைதிருப்புவது என்ற வேலையில் ஈடுபடுகின்றனர்; தினமும் மாலை 4 மணி ஆனால் போதும்; ஏதாவது ஒரு ரீல்ஸ் போட்டு திசைதிருப்புகிறார் முதல்அமைச்சர் விஜய்.

தண்ணீர் திறப்பது குறித்து ஆட்சியாளர்களுக்கு கவலை இல்லாமல் இருக்கலாம்; ஆனால் திமுக மக்கள் மன்றத்தில் போராடுகிறது. காவிரி விவகாரத்தில் திமுக சட்டப் போராட்டத்தை தொடங்கியுள்ளது; உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. தமிழக வேளாண் பட்ஜெட்டை திருப்பதி கோவிலில் வைத்து பூஜை செய்துள்ளார் வேளாண்துறை அமைச்சர் வினோத்.

தமிழக அமைச்சர்கள் அனைவரும் ரீல்ஸ் போடுவதிலேயே குறியாக உள்ளனர். நிருபர்களை பார்த்தால் திருடன் போல் ஓடுகிறார் நீர்வளத்துறை அமைச்சர் ஆனந்த். "திருட்டு லாட்டரி விற்ற அமைச்சர், திருட்டு விசிடி, பிளாக் டிக்கெட் விற்ற அமைச்சர், போதைப்பொருளுடன் சுற்றும் அமைச்சர் என ஒட்டுமொத்த ஜோக்கர் கூட்டமும் அமைச்சரவையில் உள்ளது. அமைச்சரின் அண்ணன், தம்பி எல்லாம் ஆய்வுக்கு செல்கிறார்கள். யார் அமைச்சர் என அதிகாரிகளுக்கே தெரியவில்லை. யார் யார் அமைச்சர் என முதல்அமைச்சருக்கே தெரியாது.

முதல்அமைச்சர் ரீல்ஸ், அமைச்சர்கள் ரீல்ஸ், சட்டமன்ற உறுப்பினர்கள் ரீல்ஸ் என அனைவரும் ரீல்ஸ் போட்டுக்கொண்டு சுற்றுகின்றனர். கழிவறையக் கூட விட்டுவைக்காமல் ரீல்ஸ் போடுகின்றனர். இந்த அரசிற்கு ரீல்ஸ் வெறி முத்திப்போய் உள்ளது. இதுபோன்ற ஒரு ரீல்ஸ் போடும் கேடு கெட்ட அரசை தமிழ்நாடு இதுவரைக் கண்டதில்லை.

திமுக ஆட்சியில் கட்டப்பட்ட மெட்ரோ ரெயில் பாலத்திற்கு சென்று முதல்அமைச்சர் விஜய் ஆய்வு செய்கிறார். மெட்ரோ ரெயிலில் பயணம் செய்து ரீல்ஸ் போடுகிறார். திமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டங்கள் தொடர்பாகவே முதல்அமைச்சர் விஜய் தொடர்ந்து ஆய்வு செய்கிறார். காவிரி பிரச்சினை உச்சத்தில் உள்ள நிலையில் ரீல்ஸ் கண்டென்ட் கொடுத்துக் கொண்டிருக்கிறார் விஜய். ஊரார் வீட்டு நெய்யில் ஸ்வீட் செய்து கொண்டிருக்கிறார்.

அடுத்த ஜென்மம் ஒன்று இருந்தால் விவசாயியாக பிறக்க வேண்டும் என்கிறார் விஜய்; இப்போதே அதை செய்யலாமே?. தவெக ஆட்சியில் அதிகம் பாதிக்கப்படுவது விவசாயிகள் தான். திமுகவின் தூண்டுதலின் விவசாயிகள் போராடுவதாக கூறி கொச்சைப்படுத்தியவர் முதல்அமைச்சர் விஜய். தமிழகத்தில் பலவினமான ஆட்சி நடக்கிறது; இதை புரிந்து கொண்டு மேகதாதுவில் அணை கட்ட கர்நாடகா முயற்சி செய்கிறது.

"வாயைத் திறங்க.. வாயைத் திறங்க.. மேகதாது பிரச்சினையில் தூங்கி வழியும் முதல்அமைச்சரே வாயைத் திறங்க.. வாயைத் திறங்க.. புரியலையா.. புரியலையா.. விவசாயிகளின் வேதனைகள்.. புரியலையா.. புரியலையா..". இவ்வாறு அவர் பேசினார்.

# தவெகவுக்கு எதுவுமே தெரியாது: எடப்பாடி பழனிசாமி விமர்சனம்



சென்னை, ஆக. 4

சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் 221வது நினைவு நாளையொட்டி கிண்டியில் உள்ள அவரது சிலைக்கு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அதன்பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் எடப்பாடி பழனிசாமி கூறியதாவது:

கட்சி தொடங்கி இரண்டரை ஆண்டுகளில் ஆட்சிக்கு வந்த தவெகவுக்கு காவிரி பிரச்சினை பற்றி முழுமையாக எதுவுமே தெரியாது; அனுபவம் இல்லாததால் மற்ற கட்சிகளின் கருத்துகளை தவெக அரசு கேட்டிருக்க வேண்டும். தமிழ்நாட்டிற்கு காவிரி நீரை பெற

இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்றே தெரியவில்லை.

உச்சநீதிமன்றத்தில் பெற்ற தீர்ப்பை கூட காப்பாற்ற கூட முடியாத அரசாக தவெக அரசு உள்ளது. மூத்த சட்ட வல்லுநர்களுடன் ஆலோசித்து காவிரி பிரச்சினை, மேகதாது அணை விவகாரத்திற்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும். காவிரி பிரச்சினையில் அரசியல் கட்சி தலைவர்கள் கூறுவதை தவெக அரசு கேட்கவி ல்லை. கர்நாடக அரசு அரசியல் கட்சி தலைவர்கள், விவசாயிகளை மதித்து அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டியது.

காவிரி நீர் விவகாரத்தில் அதிமுக, திமுக ஆட்சியில் எவ்வளவு போராட்டம் நடந்தது என மக்களுக்கு தெரியும். அதிமுக, திமுக என எந்த ஆட்சியாக இருந்தாலும் அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி ஆலோசிக்கப்பட்டது. அதைபோல காவிரி நீர் விவகாரத்தில் அனைத்துக்கட்சி கூட்டத்தை தவெக அரசு கூட்ட வேண்டும். விவசாய பிரதிநிதிகளையும் அழைத்து கருத்துக்களை பெற வேண்டும். அதிமுக பொதுக்குழு கூட்டம் விரைவில் கூட்டப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# மதுரை: வைகை ஆற்றை தூய்மை செய்யும் பணியில் ஈடுபட்ட அண்ணாமலை



மதுரை, ஆக. 4

'வி த லீடர்ஸ்' இயக்கத்தின் நிறுவனர் அண்ணாமலை தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:

நமது மதுரையின் அடையாளமாகவும், நம் வாழ்வியலோடும், பண்பாட்டோடும் ஒன்றிணைந்த, புனிதமான வைகை நதிக்கரையில், நமது வி த லீடர்ஸ் அமைப்பின் சார்பில் "சுத்தமான, வளமான தமிழகம்" இயக்கத்தின் கீழ் தூய்மைப் பணியிலும், மரக்கன்றுகள் நடும் நிகழ்விலும் பங்கேற்றதில் பெரும் மகிழ்ச்சி.

திங்கள்கிழமை காலை என்றாலும், பெருந்திரளாகக் கூடி, முழு அர்ப்பணிப்புடன் உழைத்த தன்னார்வலர்கள், இளைஞர்கள் மற்றும் சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் என் மனமார்ந்த பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் சமூக அக்கறையே நமது இயக்கத்தின் மிகப்பெரிய பலம்.

வைகை நதி என்பது வெறும் நதி மட்டும் அல்ல. மதுரை மாநகரின் உயிர்நாடி. பல ஆயிரம் ஆண்டுகளாக இந்த மண்ணின் நாகரிகத்தையும், விவசாயத்தையும், ஆன்மிகப் பாரம்பரியத்தையும் தாங்கி நிற்கும் தாய். வைகை அன்னையைத் தூய்மையாகப் பாதுகாப்பது, நம் ஒவ்வொருவரின் தார்மீகப் பொறுப்பு. ஒரு நதியைப் பாதுகாப்பது என்பது வெறும் சுற்றுச்சூழலைக் காப்பதல்ல, நமது பண்பாடு, வரலாறு, வாழ்வாதாரம் அனைத்தையும் பாதுகாப்பதாகும்.

வைகையை மாசுபடுத்தாமல் காப்போம். பிளாஸ்டிக் மற்றும் கழிவுகளை நதியில் கொட்டாமல் இருப்போம். நம் குழந்தைகளுக்கும், வருங்கால தலைமுறைக்கும் தூய்மையான வைகையைவிட்டுச்செல்வோம். "சுத்தமான, வளமான தமிழகம்" என்ற இலக்கை மக்கள் இயக்கமாக மாற்றி, பசுமையும் தூய்மையும் நிறைந்த தமிழ்நாட்டை ஒன்றிணைந்து உருவாக்குவோம் என்ற அன்பான வேண்டுகோளை, மதுரை மக்களுக்கு வைத்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# கோரிக்கை அட்டை அணிந்து பணி செய்யும் அரசு மருத்துவமனை நர்சுகள்



சென்னை, ஆக. 4

தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் ஆட்குறைப்பு நடவடிக்கைகளை கைவிடக் கோரி தமிழ்நாடு செவிலியர் மேம்பாட்டு சங்கம் தொடர் போராட்டங்களை நடத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக அரசாணை 204ஐ ரத்து செய்யவும், ஆட்குறைப்பு நடவடிக்கைகளை கைவிடவும் கோரி கடந்த 29.7.2026 முதல் 30.7.2026 வரை 3 நாட்கள் நர்சுகள் கோரிக்கை அட்டை அணிந்து பணி செய்தனர்.

இந்நிலையில் அரசாணை 204ஐ ரத்து செய்வது தொடர்பாகவோ, ஆட்குறைப்பு நடவடிக்கையை கைவிடுவது தொடர்பாகவோ அரசு தரப்பில் இருந்து இதுவரை எந்த திட்டமும் செயல்பாடோ இல்லாத காரணத்தால் ஏற்கனவே அறிவித்திருந்த அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கோரிக்கை கடிதம் வழங்கும் இயக்கத்துடன் சேர்த்து கோரிக்கை அட்டை அணிந்து பணி செய்யும் இயக்கத்தையும் இன்று முதல் 5ம் தேதி வரை 3 நாட்கள் தொடர முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, இன்று தமிழகம் முழுவதும் உள்ள அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் நர்சுகள், மீண்டும் கோரிக்கை அட்டை அணிந்து பணியில் ஈடுபட்டுள்ளனர். தங்களுடைய கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்க்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# அமைச்சர் ராஜ்மோகன் செய்தியாளர் சந்திப்பு

சிவன்மலைக்கும் சென்னிமலைக்கும் நடுவே ஒரு சின்னமலை இருக்கிறான் என்று நினைவு படுத்திய மாவீரன். தமிழக வெற்றி கழக இரவு பகல் பாராது இந்த பட்ஜெட்டுக்கு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

பல இடங்களில் விரும்பத்தகாத கோஷங்கள் நீட் தேர்வு போராட்டம் நடத்திய மாணவர்கள் எழுப்பினார்கள், அந்த மாணவர்கள் மீது போடப்பட்ட வழக்கு ரத்து செய்ததற்கு முதலமைச்சருக்கு வாழ்த்துக்கள்.

மாணவர்களின் உணர்வுக்கு மதிப்பளிக்கும் வகையில் நானும் இருக்கிறேன் என்று நிரூபித்திருக்கிறார்.

திட்டமிட்டு அமைச்சர் கீர்த்தனாவுக்கு எதிராக பொய் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

முதல் மூன்று மாதங்களில் இதற்கு முன்பு இருந்த



ஆட்சியாளர்கள் பெரிய முதலீடுகளை எதுவும் கொண்டு வரவில்லை... ஆனால் அமைச்சர் கீர்த்தனா மூன்று மாதங்களில் மிக பெரிய முதலீடுகளை கொண்டு வந்திருக்கிறார்.

# சுருளி அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி

உத்தமபாளையம், ஆக. 5

ஹைவேவிஸ் மலைப்பகுதியில் உள்ள தூவானம் ஏரியில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் சுமார் 9 கிலோமீட்டர் தூரம் அடர்ந்த வனப்பகுதி வழியாக வந்து கம்பம் அருகே சுருளி அருவியாக கொட்டும். சுருளி அருவிக்கு தினந்தோறும் தேனி மற்றும் திண்டுக்கல், மதுரை உள்ளிட்ட பிற மாவட்டங்களில் இருந்தும், அண்டை மாநிலமான கேரளாவில் இருந்தும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர்.

ஹைவேவிஸ் மலைப்பகுதியில் சமீபத்தில் தொடர்ந்து மழை பெய்து வந்ததால் சுருளி அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க வனத்துறையினர் கடந்த 2 நாட்களாக தடைவிதித்து இருந்தனர். இந்நிலையில் தற்போது அருவியில் நீர்வரத்து சீரானதை தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு பின் இன்று (திங்கள்கிழமை)



காலையில் இருந்து அருவியில் குளிக்க சுற்றுலா பயணிகள் அனுமதிக்கப்பட்டனர். இதனால் சுற்றுலா பயணிகள் ஆனந்த குளியலில் ஈடுபட்டனர்.

# பணக்காரர்களுக்கான ஆட்சி நடத்தும் மோடி அரசு மாணிக்கம் தாகூர் விமர்சனம்



சென்னை, ஆக .4

மோடி அரசு, பணக்காரர்களுக்கான ஆட்சி என்பது மீண்டுமொருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் எம்.பி. வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

'உலக சமத்துவமின்மை ஆய்வகம்' என்ற அமைப்பு வெளியிட்ட, '2026 உலக சமத்துவமின்மை' அறிக்கையில், 'இந்தியாவின் மொத்த செல்வத்தில், 40 சதவீதம், ஒரு சதவீதம்பேரிடம்குவிந்துள்ளது.உலகிலேயேபொருளாதார சமத்துவமின்மை அதிகம் உள்ள நாடு இந்தியா' என்பது ஆதாரங்களுடன் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'நாட்டின் மொத்த வருமானத்தில் 58 சதவீதம், 10 சதவீதம் பேருக்கு செல்கிறது. 50 சதவீத மக்களுக்கு, 15 சதவீத வருமானமே செல்கிறது. இந்தியாவில் 'வருமானம், செல்வம், பாலினம்' ஆகிய மூன்று பரிமாணங்களிலும் சமத்துவமின்மை ஆழமாகவேரூன்றியுள்ளது' என்று, அந்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. சமத்துவம், சமூக நீதியை விரும்பும் அனைவருக்கும், இது இதயத்தில் ஈட்டியைப் பாய்ச்சியது போல உள்ளது.

'இந்தியாவில் ஆண்டுக்கு 100 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் ஈட்டியவர்களின் எண்ணிக்கை 2025 2026ஆம் ஆண்டில், 576 ஆக அதிகரித்துள்ளது. கடந்த 2021 2022ஆம் ஆண்டில் 142 பேராக இருந்தநிலையில், ஐந்து ஆண்டுகளில் 300 சதவீதம் அதிகரித்துள்ளது' என நாடாளுமன்றத்தில் மோடிஅரசேஒப்புக்கொண்டுள்ளது. கடந்த 12 ஆண்டுகால மோடி ஆட்சி என்பது, அதானி, அம்பானி போன்ற பெரும் பணக்காரர்களுக்கான ஆட்சிதான் என்பது மீண்டுமொரு முறை நிரூபிக்கப்பட்டுள்ளது. மோடி ஆட்சியில் பணக்காரர்கள் மேலும் மேலும் பணக்காரர்களாக உயர்ந்து கொண்டே செல்கிறார்கள்; ஏழைகள் மேலும் மேலும் ஏழைகளாகி வருகிறார்கள்; நடுத்தர மக்கள் வாங்கும் சக்தியை இழந்து கீழே சென்று கொண்டிருக்கிறார்கள்.

2014 ஆம் ஆண்டில், சுமார் 44,000 கோடி ரூபாயாக இருந்த, அதானி குழுமத்தின் மொத்த சொத்து மதிப்பு, இப்போது சுமார் 7.85 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. சொத்து குவிப்பில், அதானி குழுமம் கின்னஸ் சாதனை படைக்க உதவியதுதான், கடந்த 12 ஆண்டுகளில் மோடி அரசு நிகழ்த்திய ஒரே சாதனை. பல்வேறு மதங்கள், ஜாதிகள், மொழிகள், இனங்கள், கலாசாரங்கள் கொண்ட இந்தியாவில், பொருளாதார வளர்ச்சி என்பது சமச்சீராக இருக்க வேண்டும். மாறாக, ஒரு சதவீதம் பேரிடம், 40 சதவீத செல்வம் குவிந்திருப்பது மிகப்பெரிய சமூக அநீதி. ஆட்சி நிர்வாகத்தின் மிகப்பெரிய தோல்வி. இதற்காக மோடி அரசு வெட்கப்பட வேண்டும். இந்த அவலத்திற்கு ஏழைகள் நலனில் அக்கறை இல்லாத, வலதுசாரி மனப்பான்மையே காரணம்.

பொருளாதார சமத்துவமின்மை என்பது, சிலிண்டருக்குள் அடைக்கப்பட்ட எரிவாயு போன்றது. அளவுக்கு அதிகமானால் வெடித்து சிதறிவிடும். பொருளாதார சமத்துவமின்மை தொடர்ந்தால், மக்கள் வீதியில்

இறங்கிபோராடும்நிலைவரும். அதானி, அம்பானிக்காக ஆட்சி நடத்தும் மோடி அரசை, விரைவில் மக்கள் தூக்கி எறிவார்கள். இந்தியாவில்சமச்சீரானவளர்ச்சிசாத்தியமாக, நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பிரதமராக வேண்டும். விரைவில் அது நடக்கும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




சென்னை தி. நகர் ரெசிடென்சி டவர்சில் நடைபெற்ற துளிர் ஃபவுண்டேஷன் டிரஸ்டின் முதலாம் ஆண்டு விழாவில், மாண்புமிகு அமைச்சர் திரு. சி.டி.ஆர். நிர்மல் குமார், சுற்றுச்சூழல் ஆர்வலர் திரு. ஜி. சுந்தர்ராஜன், முன்னாள் மாவட்ட நீதிபதி திரு. மு. கருணாநிதி, மூத்த பத்திரிக்கையாளர் திரு. ஷபீர் அகமது, சமூக ஊடகப் பிரபலம் திரு. மதன் கௌரி ஆகியோர் பங்கேற்றனர். விழாவில் மாணவர்களின் மறுசுழற்சி பொருட்கள் அரங்கு திறக்கப்பட்டு, ஏழை மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகையும் சிறந்த தன்னார்வலர்களுக்கு விருதுகளும் வழங்கப்பட்டன.

# சென்னை துறைமுகத்தில் புதிய சாதனை: ஒரே நாளில் 46,000 டன் பாரைட்ஸ் ஏற்றுமதி - புதிய சரக்கு கையாளல், நவீன கிரேன்கள் அறிமுகம்






சென்னை, ஆக. 4

சென்னை துறைமுக ஆணையம், சரக்கு கையாளுதலில் ஒரே நாளில் பல்வேறு புதிய மைல்கற்களை எட்டியுள்ளது. ஜூலை 30ஆம் தேதி நடைபெற்ற நடவடிக்கைகள் மூலம், துறைமுகத்தின் செயல்திறன் மற்றும் நவீன வசதிகள் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளன.

பாரைட்ஸ் ஏற்றுமதியில் புதிய சாதனை

ஜவஹர் துறைமுகம்IIல் M.V. Nafisa Jahan கப்பல் மூலம் ஒரே நாளில் 46,000 மெட்ரிக் டன் பாரைட்ஸ் ஏற்றுமதி செய்யப்பட்டு புதிய சாதனை படைக்கப்பட்டது. இதற்கு முன்பு, 2022 மே 31ஆம் தேதி 45,200 மெட்ரிக் டன் பாரைட்ஸ் ஏற்றுமதி செய்யப்பட்டதே அதிகபட்ச சாதனையாக இருந்தது.

முதல் முறையாக 'பிக் இரும்பு' சரக்கு கையாளல்

அதே நாளில், ஜவஹர் துறைமுகம்IVல் M.V. Agia Charis கப்பல் மூலம் 13,208 மெட்ரிக் டன் பிக் இரும்பு (Pig Iron) சரக்கு முதல் முறையாக வெற்றிகரமாக கையாளப்பட்டது. இந்த சரக்கு, சென்னை துறைமுகத்தின் NCCS 202627 சலுகைத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தில் தகுதியான வாடிக்கையாளர்களுக்கு 80 சதவீதம் வரை துறைமுகக் கட்டண சலுகையும், விசுவாச ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது.

3 நவீன ஹார்பர் மொபைல் கிரேன்கள் அறிமுகம்

சென்னை துறைமுகத் தலைவர் சச்சின் எஸ். குர்வே, ஐ.ஏ.எஸ். தலைமையில், M/s. B.L. Transport நிறுவனம் இயக்கும் 3 புதிய ஹார்பர் மொபைல் கிரேன்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டன.

இந்த கிரேன்களின் சிறப்பம்சங்கள்:

100 டன் வரை தூக்கும் திறன்

51 மீட்டர் வரை செயல்பாட்டு நீளம்

கப்பலிலிருந்து கரைக்கும், கரையிலிருந்து கப்பலுக்கும் சரக்குகளை கையாளும் வசதி

இணைந்து 170 டன் வரை தூக்கும் திறன்

24 மணி நேரமும் செயல்படும் வசதி

இந்த கிரேன்கள் மூலம் உலர் சரக்குகள், கனரக இயந்திரங்கள், மின்மாற்றிகள், காற்றாலை உபகரணங்கள், எஃகு மற்றும் கண்டெய்னர்கள் உள்ளிட்ட பல்வேறு சரக்குகளை விரைவாக கையாள முடியும்.

துறைமுகத் தலைவர் பாராட்டு

இந்தசாதனைகள்குறித்து சென்னைதுறைமுகத்தலைவர் சச்சின் எஸ். குர்வே கூறுகையில், "பாரைட்ஸ் ஏற்றுமதியில் புதிய சாதனை, புதிய சரக்கு கையாளல் மற்றும் நவீன கிரேன்கள் அறிமுகம் ஆகியவை சென்னைதுறைமுகத்தின் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் வாடிக்கையாளர் மையப்படுத்தப்பட்ட சேவைகளுக்கு சான்றாகும். இந்த வெற்றிக்கு பங்களித்த அனைத்து தரப்பினருக்கும் பாராட்டுகள்" என்றார்.

கிழக்கு கடற்கரையின் முன்னணி துறைமுகமாக வளர்ச்சி

நவீன உள்கட்டமைப்பு, மேம்பட்ட சரக்கு கையாளும் வசதிகள் மற்றும் வர்த்தக ஊக்கத் திட்டங்கள் மூலம், கிழக்கு கடற்கரையில் சரக்கு போக்குவரத்திற்கான முக்கிய நுழைவாயிலாக சென்னை துறைமுகம் தொடர்ந்து தனது நிலையை வலுப்படுத்தி வருகிறது.

# தமிழ்நாடு மின்வாரியத்தில் மேலும் ஒரு சாதனை: 700 உதவிப் பொறியாளர்களுக்கு பதவி உயர்வு




சென்னை, ஆக. 4

தமிழ்நாடு மின்வாரியத்தில் பணியாற்றி வந்த 700 உதவிப் பொறியாளர்கள் (மின்னியல்), இன்று ( 03.08.2026 ) உதவி செயற்பொறியாளர்கள் (மின்னியல்) ஆக பதவிஉயர்வுபெற்றுள்ளனர். இதுதொடர்பாக தமிழ்நாடு மின்வாரியம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;

தமிழ்நாடு முதல்அமைச்சர் ச. ஜோசப் விஜய்யின்வழிகாட்டுதலின்படியும், எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமாரின் அறிவுறுத்தல் மற்றும் தொடர் கண்காணிப்பின் அடிப்படையிலும், தமிழ்நாடு மின்வாரியத்தில் வெளிப்படையான,மூப்புமற்றும்தகுதிஅடிப்படையிலான நிர்வாக நடைமுறைகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக, ஒரே நேரத்தில் இவ்வளவு பெரிய அளவில் பொறியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.


இந்த பதவி உயர்வின் மூலம், மின்வாரியத்தின் களப்பணிகள் மேலும் வலுப்பெறுவதுடன், எதிர்வரும் பருவ மழைக்காலங்களில் மின் விநியோகம், பராமரிப்பு, புதிய மின் இணைப்புகள், துணை மின் நிலையங்களின் செயல்பாடு உள்ளிட்ட பல்வேறு பணிகள் கூடுதல் திறனுடனும், விரைவாகவும் மேற்கொள்ள இயலும் .

இப்பதவி உயர்வு பெற்றுள்ள பொறியாளர்கள், தமிழ்நாட்டின் மின்கட்டமைப்பை மேலும் மேம்படுத்துவதிலும், பொதுமக்களுக்கு தடையற்ற மற்றும் தரமான மின் விநியோக சேவையை வழங்குவதிலும் முக்கியப் பங்காற்றுவார்கள் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மின்வாரிய ஊழியர்களின் நலன் மற்றும் முன்னேற்றத்திற்குதமிழ்நாடுஅரசுதொடர்ந்துமுன்னுரிமை அளித்து வருவதாகவும், நீண்டகாலமாக நிலுவையில் இருந்த பதவி உயர்வு மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் அனைத்தும் வெளிப்படையான முறையில் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தநடவடிக்கை, தமிழ்நாடு மின்வாரியத்தில் பணியாற்றும்பொறியாளர்களின்தொழில்முன்னேற்றத்தை உறுதி செய்வதோடு, ஊழியர்களின் மன உறுதியையும், பணித் திறனையும் மேலும் உயர்த்தும் ஒரு முக்கியமான மைல்கல்லாக அமையும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராமேசுவரம் கோவிலில் ரீல்ஸ் எடுத்து இன்ஸ்டாகிராமில் பதிவிட்ட இளம்பெண்கள்



ராமேசுவரம், ஆக. 4

ராமேசுவரத்தில் பிரசித்தி பெற்ற ராமநாதசாமி கோவில் உள்ளது. இந்த கோவிலுக்கு பல்வேறு மாநிலங்களில் இருந்தும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் தினமும் ஏராளமான பக்தர்கள் வந்து செல்கின்றனர்.

இந்த நிலையில் உலக பிரசித்தி பெற்ற ராமேசுவரம் கோவிலில் உள்ள 3ம் பிரகாரத்தில் 2 பெண்கள் நடனம் ஆடியபடி செல்போனில் ரீல்ஸ் எடுத்து அதனை இன்ஸ்டாகிராமில் பதிவு செய்ததாக தெரிகிறது. அந்த வீடியோதற்போது சமூகவலைதளங்களில் வைரலாகி வருகிறது.

கோவிலுக்குள் ரீல்ஸ் எடுப்பதற்கு தடை விதிக்கப்பட் டுள்ள நிலையில் அதையும் மீறி 2 இளம்பெண்கள் 3ம் பிர காரத்தில் ரீல்ஸ் எடுத்து வீடியோ பதிவு செய்ததற்கு பக்தர்கள் மற்றும் இந்து அமைப்பினர் கண்டனம் தெரிவித்துள்ளனர். மேலும், ரீல்ஸ் எடுத்த இளம்பெண்கள் மீது கோவில் நிர்வாகம் போலீசார் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்து அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தசம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# விளாத்திகுளம் திமுக எம்.எல்.ஏ மார்க்கண்டேயனுக்கு நிபந்தனை ஜாமீன்



தூத்துக்குடி, ஆக. 4

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் கடந்த 18ந் தேதி தி.மு.க. பொதுக்கூட்டம் நடந்தது. இதில் பங்கேற்ற விளாத்திகுளம்தொகுதிதிமுகஎம்.எல்.ஏ.மார்க்கண்டேயன் தமிழக முதல்அமைச்சர் விஜய்க்கு மிரட்டல் விடுக்கும் வகையிலும், அவதூறாகவும் பேசினார். இது தொடர்பாக அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில், திமுக எம். எல்.ஏ. மார்க்கண்டேயனை போலீசார் கடந்த 20ம் தேதி கைது செய்தனர். பின்னர், கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்ட மார்க்கண்டேயனை 15 நாட்கள் நீதிமன்ற காவலில் அடைக்க கோர்ட்டு உத்தரவிட்டது. இதையடுத்து அவர் நெல்லை பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டார்.

இதையடுத்து, தனக்குஜாமீன்வழங்கக்கோரிஎம்.எல்.ஏ. மார்க்கண்டேயன் தாக்கல் செய்த மனுவை தூத்துக்குடி கோர்ட்டு கடந்த 22ம் தேதி தள்ளுபடி செய்தது. இதனை தொடர்ந்து தனக்கு ஜாமீன் வழங்கக்கோரி தூத்துக்குடி கோர்ட்டில் 2வது முறையாக மார்க்கண்டேயன் மீண்டும் மனு தாக்கல் செய்தார். அந்த ஜாமீன் மனுவும் தள்ளுபடி செய்தது.இதையடுத்து,திமுகஎம்.எல்.ஏ.மார்க்கண்டேயன் சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்து இருந்தார்.

இந்த மனுவை இன்று விசாரித்த சென்னை ஐகோர்ட், மார்க்கண்டேயனுக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கி உத்தரவிட்டுள்ளது. இனிமேல் இதுபோன்று பேசமாட்டேன் என்று உத்தரவாதம் அளிக்க வேண்டும்: தூத்துக்குடி காவல் நிலையத்தில் நாள்தோறும் ஆஜராகி கையெழுத்திட வேண்டும். சட்டமன்றம் நடைபெறும் நாளில் மட்டும் கையெழுத்திடுவதில் விலக்கு அளிக்கப்படுகிறது" என்று கூறியுள்ளது.

மார்க்கண்டேயன் பேசியது என்ன? மானங்கெட்ட தமிழ்நாட்டினுடைய முதல் அமைச்சர்.. உன்னைய சட்டமன்றத்திற்குள் வைத்து பார்த்துகுறோம்.. நாங்க என்ன கோமாளி பயல்கன்னு நினைக்கிறீங்களா.. சட்டமன்றத்தை பூட்டுவாராம்.. பூட்டினால் எலும்பு இருக்காது உடைத்துவிட்டுதான் உன்னை அனுப்பி விடுவோம்.

இவ்வளவு ஒரு கேவலமான ஒரு முதல்வரை தமிழ்நாடு மட்டுமின்றி இந்திய வரலாறே பெற்றது இல்லை. என மார்க்கண்டேயன் பேசியிருந்தார்.

# அரசியல் சூட்டை தணித்து அள்ளித்தந்த வானம்: தமிழகம் நோக்கி பொங்கி வரும் காவிரி நீர்



சென்னை, ஆக. 4

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கொட்டித்தீர்த்த கனமழையால் தமிழகம் நோக்கி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் முக்கிய அணைகளில் ஒன்றான மேட்டூர் அணையில் 79 அடிக்கும் குறைவாக தண்ணீர் இருந்த காரணத்தால், இந்த ஆண்டு ஜூன் 12ந் தேதி பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்படவில்லை.

இதனால், டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி முழுமையாக பாதிக்கப்பட்டது. இதனால், கர்நாடகம் தமிழகத்திற்கு தர வேண்டிய காவிரி நீரை தமிழகம் கேட்டது. ஆனால், வழக்கம் போல் கர்நாடகம் மறுத்துவிட்டது.

இந்த நிலையில், கடந்த ஜூன் மாதம் 28ந் தேதி நடைபெற்ற காவிரி ஒழுங்காற்றுக்குழு கூட்டத்தில் தமிழக அரசு காவிரியில் கர்நாடகம் அரசு தண்ணீர் திறந்துவிட தனது வாதங்களை அழுத்தமாக முன்வைத்தது. இதனைத் தொடர்ந்து, 15 நாட்களுக்கு காவிரியில் வினாடிக்கு 3,500 கனஅடி வீதம், அதாவது 4½ டி.எம்.சி. தண்ணீரை தமிழ்நாட்டிற்கு திறந்துவிட கர்நாடகத்தை காவிரி ஒழுங்காற்றுக்குழு அறிவுறுத்தியது. ஆனால், அதற்கும் கர்நாடகம் மறுத்துவிட்டது.

அதுமட்டுமல்லாமல், காவிரி மேலாண்மை ஆணையத்தில் இதுகுறித்து முறையிடுவோம் என்றுகூறி, கர்நாடக அரசு முறையிட்டது. இந்த முறையீட்டின் அடிப்படையில் காவிரி மேலாண்மை ஆணையம் கடந்த மாதம் (ஜூலை) 24ந் தேதி மீண்டும் கூடியது. அப்போது கர்நாடகத்தின் வாதத்தை நிராகரித்த ஆணையம், சுப்ரீம் கோர்ட்டு உத்தரவுப்படி நடந்துகொள்ள கர்நாடக அரசை வலியுறுத்தியதுடன், காவிரி ஒழுங்காற்றுக் குழு பரிந்துரைத்த அளவில் தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிடவும் கர்நாடகத்துக்கு உத்தரவிட்டது.

இந்த உத்தரவுக்கு கர்நாடக அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் குதித்தன. இதற்கிடையே, தமிழக முதல்அமைச்சர் ஜோசப் விஜய் கர்நாடக முதல் மந்திரி டி.கே.சிவகுமார் ஆகியோர் இன்று பெங்களூருவில் சந்தித்து பேச ஏற்பாடு செய்யப் பட்டது. இதுகுறித்து, இரு மாநில முதல்மந்திரிகளும், தங்கள் மாநில நீர்வளத்துறை அதிகாரிகளுடன் அவசரஆலோசனையில் ஈடுபட்டனர். இதற்கு மத்தியில், தமிழக எதிர்க்கட் சிகள் இருமாநில முதல்மந்திரிகள் சந்திப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தன.

கர்நாடகத்திலும் எதிர்ப்பு வலுத்ததால், கர்நாடக மாநில முதல்மந்திரி டி.கே.சிவகுமார், தமிழக முதல்அமைச்சர் இப்போது வரவேண்டாம் என்று கூறிவிட்டார். இப்படி, இருமாநில அரசியலில் அனல் பறந்து கொண்டிருந்த நேரத்தில், அரசியல் சூட்டை தணிக்கும் வகையில் கடந்த மாதம் (ஜூலை) 31ந் தேதி, காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை கொட்டித்தீர்த்தது. இதனால், கர்நாடக அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது.

இதனால், பாதுகாப்பு கருதி கபினி அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது. தற்போதைய நிலையில், தமிழகத்திற்கு 28 ஆயிரம் கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. பொங்கி வந்த காவிரி இப்போது எல்லையை கடந்து தமிழக மண்ணை முத்தமிட்டு இருக்கிறது. இதனால்,டெல்டா மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தற்போதைய நிலையில், கர்நாடக அணைகளான கிருஷ்ணராஜசாகரில் 91.8 அடியும் (மொத்த கொள்ளளவு 124.8 அடி), கபினியில் 56.28 அடியும் (65 அடி), ஹேரங்கியில் 127.55 அடியும் (129 அடி), ஹேமாவதியில் 100.98 அடியும் (117 அடி) தண்ணீர் உள்ளது.

கர்நாடக அணைகள் வேகமாக நிரம்புவதால், தமிழகத்திற்கான தண்ணீர் திறப்பு மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய நிலையில், மேட்டூர் அணையில் 73.82 அடி கொள்ளளவு தண்ணீர் உள்ளது. காவிரியில் திறந்துவிடப்பட்ட நீர் மேட்டூர் அணையை அடையும்போது, தண்ணீர் அளவு வேகமாக உயரும். டெல்டா பாசன பகுதியில், குறுவை சாகுபடி தப்பினாலும் அடுத்து வரும் சம்பா சாகுபடிக்காவது மேட்டூர்அணையில் இருந்து தண்ணீர்திறந்துவிட முடியும்.

# இரு பாலர் தங்கும் விடுதியால் சமூக சீரழிவு ஏற்படுகிறது இதற்கு உரிய சட்ட திட்டங்களை அமல்படுத்த வேண்டும் அல்லது இருபாலர் விடுதிக்கு தடை விதிக்க வேண்டும் தமிழ்நாடு ஐடி விடுதி உரிமையாளர்கள் நல சங்க தலைவர் சீத்தாராமன் வலியுறுத்தல்




இருபாலர் தங்கும் விடுதிக்கு தடை விதிக்க வேண்டும்.. வீடுகளுக்கு வழங்கும் கட்டணம் போல விடுதிகளுக்கும் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு ஐடி விடுதி உரிமையாளர் நலச் சங்கத்தினர் சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்...

ஆர்ப்பாட்டத்தில் 500க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு சொத்து வரியை மாற்ற வேண்டும் குடிநீர் கட்டணத்தை சீர்படுத்த வேண்டும் மின்சார கட்டணத்தை முறைப்படுத்த வேண்டும் இரு பாலர் விடுதியை தடை செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பதாகைகள் ஏந்தி கோஷங்களை எழுப்பினர்...

முன்னதாக செய்தியாளர்களை சந்தித்த தமிழ்நாடு ஐடிவிடுதிஉரிமையாளர்நலசங்கதலைவர்சீத்தாராமன்,

மாதம்தோறும் 800 ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாய் வரைகமர்சியல்டேக்ஸ்வழங்கிக்கொண்டிருக்கிறோம் அதிலிருந்து விலக்கு கொடுத்து இல்லங்களுக்கான மின் கட்டணமாக மாற்றி தர வேண்டும்.

அரசு மின்சார கட்டணத்தை குறைத்தால் நாங்களும் விடுதி கட்டணத்தை குறைக்க தயாராக இருக்கிறோம்...

இருபாலர் தங்கும் விடுதிக்கு தமிழக அரசு தடை விதிக்க வேண்டும்...

விடுதியை தடை செய்ய வேண்டும் என்று பலமுறை அரசிடம் முறையிட்டுள்ளோம் ஆனால் கடந்த ஆட்சியாளர்கள் கண்டுகொள்ளவில்லை.

இந்த ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் இதற்கென தனிச் சட்டங்கள் இயற்றப்படவில்லை.. இயற்ற வேண்டும்

இந்த விடுதிகளில் போதை வஸ்துகளை பயன்படுத்துகின்றனர் அதனால் அதனை தடைசெய்ய வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார்...

(பைட் சீத்தாராமன், தலைவர், தமிழ்நாடு ஐடி விடுதி உரிமையாளர்கள் நல சங்கம்)

தின கனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

04.08.2026

# திருவொற்றியூரில் மர்ம மரணம் வயிற்றில் காயத்துடன் இளைஞர் சடலமாக மீட்பு – கொலையா? போலீசார் விசாரணை



சென்னை, ஆக.4

சென்னை திருவொற்றியூர் சத்தியமூர்த்தி நகரைச் சேர்ந்த பாபு (39), பெயிண்டராக வேலை செய்து வந்தார். இந்நிலையில், திருவொற்றியூர் வள்ளலார் நெடுஞ்சாலையில் உள்ள போக்குவரத்து போலீஸ் பூத் பின்புறம், வயிற்றில் கூர்மையான பொருளால் குத்தப்பட்ட காயத்துடன் அவர் உயிரிழந்த நிலையில் கிடந்தார். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த திருவொற்றியூர் போலீசார், அவரது உடலை மீட்டு அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு பிரேதப் பரிசோதனைக்காக வைத்தனர். இந்த சம்பவம் கொலையா, என்பது குறித்து பல்வேறு கோணங்களில் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டுவருகின்றனர். மேலும், சம்பவ இடத்தைச் சுற்றியுள்ளசிசிடிவிகாட்சிகளையும் கைப்பற்றி ஆய்வு செய்து வருகின்றனர். பள்ளிகள், மருத்துவமனைகள் அதிகம் உள்ள பரபரப்பான பகுதியில் இந்த மர்ம மரணம் நிகழ்ந்திருப்பது பொதுமக்களிடையே அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

# தங்கம் விடுதிகளுக்கு 7500 ரூபாய்க்கு மேலே வாடகை இருந்தால் 18 சதவீதம் வரியும், 7500 கது கீழே இருந்தால் 5 சதவீதம் வரியும் விதிக்க வேண்டும்



சென்னை, ஆக. 4

உணவகங்களுக்கு ஜி எஸ் டி யில் இன்புட் டேக்ஸ் இல்லை. அகில இந்திய நிதி அமைச்சர் சந்தித்து உணவு சம்பந்தமான சில கொள்கைகளை முன் வைத்தோம் குறிப்பாக உணவு ஹோட்டல்களுக்கு மட்டும் இன்போடெக்ஸ் இல்லை. ஆனால் இனிப்பாக இருந்தாலும் சரி காரமாக இருந்தாலும் சரி அதனை தயாரிக்கும் உணவகங்களுக்கும் டெக்ஸ்டைல் என அனைத்திற்கும் input tax உள்ளது. ஹோட்டல் களுக்கு மட்டும் தவறிவிட்டது. அதனை செயல்படுத்த வேண்டும்என்றுகோரிக்கைவிடுத்துள்ளும். ஆகஸ்ட் 1 2 3 ஆகிய தேதிகளில் சென்னை டிரேட் சென்டரில் உணவு எக்ஸ்போ அதாவது உலக தரத்திலான தென் தமிழகத்தைச் சேர்ந்த உணவுகளுக்கு எல்லாம் தேவையான அனைத்து நவீன தயாரிப்புகளையும் உபகரணங்களையும் விற்பதற்கான ஏற்பாடு செய்திருக்கிறோம்.

தங்கம் விடுதிகளுக்கு 7500 ரூபாய்க்கு மேலே வாடகை இருந்தால் 18 சதவீதம் வரியும் , 7500 கது கீழே இருந்தால் 5 சதவீதம் வரியும் விதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறோம்.

இதனை தொடர்ந்து தமிழ்நாடு ஹோட்டல் கௌரவ சங்கத் தலைவர் ஸ்ரீநிவாசன் , மற்ற உணவு உண வகளுக்கு போல எங்களுக்கும் வரியை விதிக்க வேண்டும் . நாங்களும் எங்கள் உணவகங்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கும் உணவு தயாரிக்கும் பானங்களுக்கும் செலவிட வேண்டும். இதனால் மற்ற உணவகங்களை போல இனிப்பு காரம் கலந்த பேக்கரியில் எப்படி ஜிஎஸ்டி விதிக்கப்பட்டுள்ளது அதேபோல ஹோட்டல்களுக்கும் வரி விதிக்கப்பட வேண்டும் அறிவுறுத்த வேண்டும். வெளியூரிலிருந்து வருபவர்கள்களுக்கும் அதே விடுதி வளாகத்தில் இயங்குகின்ற அத்தனைஉணவகங்களுக்கும்உடனடியாக 18 சதவீதம் கூட்ட வேண்டும் ஒரு நாள் மட்டும் அல்ல ஆண்டு முழுவதும் அமலில் இருக்க வேண்டும் அதேபோல இந்த வரிகளை இன்போடெக்ஸ் வழங்க வேண்டும் உணவகங்கள் தங்கும் விடுதிகளுக்கும் இது உணவகங்களுக்கு அதே ஐந்து சதவீதம் வரி தொடங்க வேண்டும் என்று வேண்டுகோகள் வைத்து இருக்கிறோம்அதைநிறைவேற்றிதருவதாக வாக்களித்திருக்கிறார்கள்.

# தமிழகம் முழுவதும் அரசு செவிலியர்கள் கருப்பு பேட்ஜ் அணிந்து 3 நாள் கவன ஈர்ப்பு போராட்டம் தொடக்கம்



சென்னை, ஆக. 4

தமிழ்நாடு முழுவதும் அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் செவிலியர்கள், தமிழ்நாடு அரசு நர்சுகள் சங்கத்தின் தலைமையிலும், ஒன்றிணைந்த செவிலியர்கள் சங்கங்களின் ஆதரவுடனும், மூன்று அம்ச பிரதான கோரிக்கைகளை வலியுறுத்தி மூன்று நாள் அரசு கவன ஈர்ப்பு போராட்டத்தை இன்று தொடங்கினர். போராட்டத்தின் முதல் நாளாக மாநிலம் முழுவதும் கருப்பு பேட்ஜ் அணிந்து, பொதுமக்களுக்கு எந்தவித சேவை பாதிப்பும் ஏற்படாத வகையில் பணியில் ஈடுபட்டபடியே தங்களது எதிர்ப்பை பதிவு செய்தனர். இதன் தொடர்ச்சியாக சென்னையில், ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, ராஜீவ் காந்தி அரசு ஸ்டான்லி மருத்துவமனை உள்ளிட்ட அரசு மருத்துவமனைகளில் செவிலியர்கள் கருப்பு பேட்ஜ் அணிந்துபணியாற்றினர். இதேபோல்,தமிழகம்முழுவதும் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இந்த கவன ஈர்ப்பு போராட்டம் நடைபெற்றது. செவிலியர்கள் முன்வைத்துள்ள மூன்று முக்கிய கோரிக்கைகள்: அரசாணை எண் 204 மூலம் மேற்கொள்ளப்படும் செவிலியர் ஆட்குறைப்பு நடவடிக்கையை முழுமையாக ரத்து செய்ய வேண்டும். மேலும், ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மெண்டார் செவிலியர்களின் ஆட்குறைப்பு நடவடிக்கையையும் கைவிட வேண்டும். தொகுப்பூதிய செவிலியர் நியமன முறையை ரத்து செய்து, தற்போது தொகுப்பூதியத்தில் பணியாற்றி வரும் அனைத்து செவிலியர்களுக்கும் உடனடியாக பணி நிரந்தரம் வழங்க வேண்டும். 'செவிலியர் அலுவலர்' என்ற பெயர் மாற்றம் மற்றும் பணி வரன்முறை தொடர்பான அரசாணையை தமிழக அரசு உடனடியாக வெளியிட வேண்டும். இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி, ஆகஸ்ட் 3 முதல் 5 ஆம் தேதி வரை மூன்று நாட்கள் கருப்பு பேட்ஜ் அணிந்து, நோயாளிகள் சேவையில் எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் பணியாற்றியபடியே போராட்டம் நடைபெறும் என்று சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர். மேலும், கோரிக்கைகள் குறித்து தமிழக அரசு உடனடியாக சங்க நிர்வாகிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி, சுமூகமானதீர்வுகாணவேண்டும்என்றும், இல்லையெனில் அடுத்த கட்ட போராட்டங்களை அறிவிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும் என்றும் அவர்கள் எச்சரித்தனர். இது தொடர்பாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், தமிழ்நாடு அரசு நர்சுகள் சங்கத்தின் மாநிலத் தலைவர் சக்திவேல், வடக்கு மண்டல பொதுச் செயலாளர் கோபால்தேவி, தென் மண்டல பொதுச் செயலாளர் ஜோதி, சென்னை மண்டலத் தலைவர் சந்திரகலா, மாநில இணைச் செயலாளர் ஜீவா ஸ்டாலின், தமிழ்நாடு எம்.ஆர்.பி. செவிலியர்கள் நலச் சங்க மாநில செயலாளர் அம்பேத்கர் கணபதி, மாநில துணைத் தலைவர் செந்தில்குமாரி மற்றும் நிர்வாகிகள் சாந்தி, மாரியம்மாள், அழகர் ராஜா, வேல் மோகன்தாஸ், குருநாதன், முத்துக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டு போராட்டத்தின் நோக்கம் மற்றும் கோரிக்கைகள் குறித்து விளக்கமளித்தனர்.

## இன்றைய ராசி பலன்கள் (04.08.2026)

**மேஷம்:** தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படும். மூத்த அதிகாரிகளின் ஆதரவும் வழிகாட்டுதலும் கிடைக்கும். குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் நிலவும்.

**ரிஷபம்:** தொழிலில் இருந்த சிக்கல்கள் விலகும். வங்கி கடன் முயற்சி செய்துகொண்டிருப்பவர்களுக்கு நல்ல செய்தி கிடைக்கும். மற்றவர்களை அளவுக்கு அதிகமாக நம்புவதைத் தவிர்க்கவும்

**மிதுனம்:** சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம்.வாகனப்பயணங்களிலும் பணப் பரிவர்த்தனைகளிலும் அதிக கவனம் தேவை.

**கடகம்:** சந்திராஷ்டம நிறைவு என்பதால் பிற்பகலுக்கு மேல் நிம்மதி கூடும். கணவன்மனைவி இடையே புரிதல் அதிகரிக்கும். கூட்டுத் தொழில் மற்றும் வாடிக்கையாளர் தொடர்புகள் மூலம் நல்ல லாபம் கிடைக்கும்

**சிம்மம்:** தொழில் சார்ந்த விஷயங்களில் நிதானம் தேவை. அவசரப்பட்டு பெரிய முதலீடுகளைச் செய்ய வேண்டாம். மாணவர்களுக்குக் கல்வியில் நல்ல கவனம் மற்றும் முன்னேற்றம் ஏற்படும்.

**கன்னி:** ஆக்கப்பூர்வமான எண்ணங்கள் உருவாகும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைக்கும்.

**துலாம்:** புதிய திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறும். காதலிப்பவர்களுக்கு இடையே புரிந்துணர்வு கூடும். பணிபுரியும் இடத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்:** சகோதர வழியில் உதவிகள் கிடைக்கும். எடுத்த காரியங்களில் சுறுசுறுப்புடன் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கும்.

**தனுசு:** பணவரவு சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் சுப பேச்சுகள் சுமுகமாக முடியும். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நன்மையளிக்கும்.

**மகரம்:** சந்திரனின் சாதகமான நகர்வால் மன அமைதி கூடும். எதிர்பார்த்த உதவிகளும் பரிசுகளும் கிடைக்கும். ஆன்மீகக் காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**கும்பம்:** தேவையற்ற விரயச் செலவுகள் வரக்கூடும் என்பதால் சிக்கனம் தேவை. வெளிநாடு அல்லது வெளியூர் தொடர்பான செய்திகள் சாதகமாக வரும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

**மீனம்:** தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல லாபம் கிட்டும். நிலுவையில் இருந்த பாக்கிகள் வசூலாகும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் ஆதரவு கிடைக்கும்.

# குற்றாலம் அருவிகளில் 2வது நாளாக குளிக்க தடை




தென்காசி, ஆக. 4

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் கடந்த சில வாரங்களாக நீர்வரத்து மிகக்குறைந்த அளவிலேயே இருந்தது. இதற்கிடையே, மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகளில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது.

நீர்வரத்து இன்று சீரானதால், 2 நாட்கள் தடைக்கு பின்னர் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டது. விடுமுறை தினம் என்பதால் நேற்று குற்றால அருவிகளில் சுற்றுலாவாசிகளின்கூட்டம் அதிகரித்து காணப்பட்டது. சிறிது நேரத்திற்குள் நீர்வரத்து அதிகரித்ததை தொடர்ந்து ஐந்தருவியில் குளித்துக் கொண்டிருந்த சுற்றுலா பயணிகளை போலீசார் வெளியேற்றினர். தொடர்ந்துகுற்றாலம் மெயின் அருவியில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டது.

இந்தநிலையில்,குற்றாலஅருவிகளில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு 2வது நாளாக தடை விதிக்கப்பட்டுள்ளது. பிரதான அருவி, மெயின் அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# "பெண்களுக்கு காதலை விட மரியாதை அதிகம் கொடுங்கள்" மேடையில் மனம் திறந்த சூர்யா



மனைவிக்கு காதலை விட மரியாதை அதிகம் கொடுங்கள் என்று 'விஸ்வநாத் & சன்ஸ்' திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா மேடையில் சூர்யா மனம் திறந்து பேசினார்.

நடிகர் சூர்யாவின் 46வது திரைப்படமான 'விஸ்வநாத் & சன்ஸ்' திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா கோவையில் நடைபெற்றது. இதில் நடிகர் சூர்யா, மமிதா பைஜு, இசையமைப்பாளர் ஜி.வி. பிரகாஷ், இயக்குநர் வெங்கி அட்லூரி, நடிகை ராதிகா சரத்குமார், நடிகர் சுனில் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


விழாவில் பேசிய சூர்யா, "காதல் என்பது தாலி கட்டும் நாளில் மட்டும் உணரப்படும் ஒன்று அல்ல. ஒவ்வொரு நாளும் காதலிக்க வேண்டும். 20 ஆண்டுகள் ஒன்றாக வாழ்ந்தாலும் அந்த அன்பும், காதலும் தொடர வேண்டும். வாழ்க்கையில் காலம் மாறலாம், முன்னுரிமைகள் மாறலாம், மனிதர்களும் மாறலாம். ஆனால், நம் துணை மீது வைத்திருக்கும் அன்பு மட்டும் ஒருபோதும் மாறக்கூடாது" என்று கூறினார்.

மேலும் பேசிய அவர், "ஒரு பெண் வாழ்க்கையில் ஒரு நிலையை அடைவதற்காக கடந்து வரும் பாதை, ஒரு ஆண் கடந்து வருவதை விட மிகவும் கடினமானது. ஒரு வீட்டை கவனித்துக் கொள்வதிலும், குழந்தையை பெற்றெடுத்து வளர்ப்பதிலும் பெண்கள் எண்ணற்ற தியாகங்களை செய்கிறார்கள். அந்த தியாகங்களுக்கு எப்போதும் மதிப்பளிக்க வேண்டும்" என்றார்.

தொடர்ந்து பேசிய சூர்யா, "உங்கள் துணைக்கு எப்போதும் மரியாதையும் அன்பும் குறையக் கூடாது. உண்மையில் காதலை விட மரியாதையை அதிகமாக அவர்களுக்குக் காட்டுங்கள். அந்த மரியாதையை வாழ்க்கை முழுவதும் உறுதியாக கடைபிடியுங்கள்" என்று உருக்கமாக பேசினார்.

'கருப்பு' படத்தைத் தொடர்ந்து சூர்யா நடிப்பில் உருவாகியுள்ள 'விஸ்வநாத் & சன்ஸ்' திரைப்படத்தை தெலுங்கு இயக்குநர் வெங்கி அட்லூரி இயக்கியுள்ளார். ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ள இந்த திரைப்படம், ஒரு நடுத்தர வயது விளையாட்டு வீரருக்கும், அவர் மீது ஈர்ப்பு கொள்ளும் இளம் பெண்ணுக்கும் இடையேயான உறவை மையமாக கொண்ட கதையாக உருவாகியுள்ளதாக தெரிகிறது. இப்படம் ஆகஸ்ட் 14ம் தேதி திரைக்கு வருகிறது.

## "கஜினி படத்திலிருந்தே சூர்யா மீது கிரஷ்" மமிதா பைஜு



கஜினி படத்திலிருந்தே சூர்யா மீது கிரஷ் உள்ளதாக 'விஸ்வநாத் & சன்ஸ்' திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா மேடையில் மமிதா பைஜு ஒப்பனாக பேசினார்.

நடிகர் சூர்யாவின் 46வது திரைப்படமான 'விஸ்வநாத் & சன்ஸ்' திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா கோவையில் நடைபெற்றது. இதில் நடிகர் சூர்யா, மமிதா பைஜு, இசையமைப்பாளர் ஜி.வி. பிரகாஷ், இயக்குநர் வெங்கி அட்லூரி, நடிகை ராதிகா சரத்குமார், நடிகர் சுனில் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் பேசிய மமிதா பைஜு, "சூர்யா சாரை பார்த்து நிறைய கற்றுக்கொண்டிருக்கிறேன். இதற்கு முன்பு அவருடன் சேர்ந்து நடிக்கும் வாய்ப்பு தவறிவிட்டது. ஆனால் இந்த முறை அந்த வாய்ப்பு கிடைத்தது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. கஜினி படத்தில் இருந்தே சூர்யா சார் மீது எனக்கு கிரஷ் இருக்கிறது. அவருடன் இணைந்து பணியாற்றியது மிகவும் சந்தோஷமாக இருந்தது' என்றார்.

தெலுங்கு இயக்குநர் வெங்கி அட்லூரி இயக்கியுள்ள 'விஸ்வநாத் & சன்ஸ்' திரைப்படம் வருகிற 14ஆம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இதில் ராதிகா சரத்குமார், ரவீனா டாண்டன், மமிதா பைஜு உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

## 'அவர்தான் என் மியூசிக்கல் ஐகான்'... மனம் திறந்த ஜி.வி. பிரகாஷ்

இசையமைப்பாளர், பாடகர், நடிகர் என தமிழ் திரையுலகில் பன்முக திறமையுடன் வலம் வரும் ஜி.வி. பிரகாஷ், தனது இசைப் பயணத்திற்கு மிகப்பெரிய உந்துசக்தியாக இசைப்புயல் ஏ.ஆர். ரகுமான் இருந்ததாக தெரிவித்துள்ளார். அவரது இந்த பேச்சு ரசிகர்கள் மத்தியில் கவனம் பெற்றுள்ளது.

ஏ.ஆர். ரகுமானின் அக்கா மகள் ஏ.ஆர். ரெஹைனாவின் மகனான ஜி.வி. பிரகாஷ், சிறுவயதிலேயே ரகுமான் இசையில் வெளியான பல பாடல்களில் தனது குரலை பதிவு செய்துள்ளார். பின்னர், இயக்குநர் வசந்தபாலன் இயக்கிய 'வெயில்' திரைப்படம் மூலம் 19 வயதிலேயே இசையமைப்பாளராக அறிமுகமானார்.

இதுவரை 120க்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கு இசையமைத்துள்ள அவர், 500க்கும் அதிகமான பாடல்களை உருவாக்கியதுடன், சுமார் 100 பாடல்களை பாடியுள்ளார். மேலும், 'சூரரைப் போற்று', 'வாத்தி' உள்ளிட்ட படங்களுக்காக இரண்டு தேசிய விருதுகளையும் பெற்றுள்ளார். 'டார்லிங்' திரைப்படம் மூலம் கதாநாயகனாக அறிமுகமான ஜி.வி. பிரகாஷ், இதுவரை 20க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளார். தற்போது அவர் நடித்துள்ள 'இம்மார்ட்டல்' திரைப்படம் விரைவில் வெளியாக உள்ளது.

சூர்யா மற்றும் மமிதா பைஜு நடித்துள்ள 'விஸ்வநாத் & சன்ஸ்' திரைப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ளார். இந்தப் படத்தின் இசை வெளியீட்டு விழா நேற்று கோவையில் பிரமாண்டமாக நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசிய ஜி.வி. பிரகாஷ், தனது இசைப் பயணம் குறித்து மனம் திறந்தார். விழாவில் பேசிய ஜி.வி. பிரகாஷ், "ரகுமான் சார் தான் என்னுடைய மியூசிக்கல் ஐகான். சின்ன வயதில் இருந்தே அவருடைய பாடல்களைக் கேட்டு வளர்ந்தேன். அவரிடம் உதவியாளராகவும் பணியாற்றியிருக்கிறேன். ஒரு குருவாகவும், மென்டராகவும் அவர் என்னை ஊக்கப்படுத்தியபோது கிடைத்த மகிழ்ச்சியே எனக்கு மிகப்பெரிய விருது. அவருடைய பாராட்டும் ஊக்கமும் என் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒன்று," என்று நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

# 20 பந்துகள்... 9 ரன்கள்... 4 விக்கெட்டுகள் ஆட்டத்தை தலைகீழாக மாற்றிய ஆர்ச்சர்



தி ஹண்ட்ரட் தொடரில் நடைபெற்ற 16வது லீக் ஆட்டத்தில் ஜோப்ரா ஆர்ச்சர் ஆபாரமாக பந்துவீசி ஆட்டத்தை தலைகீழாக மாற்றினார்.

திஹண்ட்ரட்தொடரின்16வதுலீக்போட்டியில் லண்டன்ஸ்பிரிட் மற்றும் சதர்ன்பிரேவ் அணிகள் மோதின. பரபரப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் ஜோப்ரா ஆர்ச்சரின் அசத்தலான பந்துவீச்சால் சதர்ன் பிரேவ் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இப்போட்டியில் முதலில் பேட்டிங் செய்த லண்டன் ஸ்பிரிட் அணி, ஜோப்ரா ஆர்ச்சரின் வேகப் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் தடுமாறியது. 103 ரன்களுக்கு 5 விக்கெட்டுகளை மட்டுமே இழந்திருந்த அந்த அணி, அடுத்த 5 விக்கெட்டுகளை வெறும் 2 ரன்களுக்குள் பறிகொடுத்து 105 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. அந்த அணியில் தொடக்க வீரர் ஜானி பேர்ஸ்டோ மட்டும் சிறப்பாக விளையாடி 56 ரன்கள் எடுத்தார்.

இப்போட்டியில் ஜோப்ரா ஆர்ச்சர், 20 பந்துகளை வீசி வெறும் 9 ரன்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார். அவர் வீசிய 20 பந்துகளில் 11 பந்துகள் டாட் பால்களாக அமைந்தது குறிப்பிடத்தக்கது. இதுவே தி ஹண்ட்ரட் தொடரில் ஜோப்ரா ஆர்ச்சரின் மிகச்சிறந்த பந்துவீச்சாகும்.

பின்னர் 106 ரன்கள் என்ற எளிய இலக்கை துரத்திய சதர்ன் பிரேவ் 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

# 25 சிக்ஸர், 13 பவுண்டரி... 233 ரன்கள் உள்நாட்டு போட்டியில் புயலாக மாறிய அபிஷேக் சர்மா




இந்திய இளம் நட்சத்திர வீரர் அபிஷேக் சர்மா, பஞ்சாப் மாநில மாவட்டங்களுக்கு இடையேயான சீனியர் கிரிக்கெட் போட்டியில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி 91 பந்துகளில் 233 ரன்கள் குவித்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளார்.

தார்ன் தரன் அணிக்கு எதிராக அமிர்தசரஸ் அணிக்காக களமிறங்கிய அபிஷேக் சர்மா, தொடக்கம் முதலே அதிரடியாக விளையாடினார். எதிரணி பந்துவீச்சாளர்களை நாலாபுறமும் சிதறடித்த அவர், வெறும் 91 பந்துகளில் 233 ரன்கள் குவித்தார்.

அவரது மிரட்டலான பேட்டிங்கால் அமிர்தசரஸ் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 533 ரன்கள் என்ற ஸ்கோரை குவித்தது.

அபிஷேக் சர்மாவின் இந்த அசுரத்தனமான இன்னிங்ஸின் ஸ்கோர்கார்டும், போட்டியின் புகைப்படங்களும் சமூக வலைதளங்களில் வேகமாக பரவி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றன.

உள்நாட்டு போட்டியில் அபாரமாக விளையாடியுள்ள அபிஷேக் சர்மா, சமீபகாலமாக சர்வதேச டி20 கிரிக்கெட்டில் சுமாரான ஆட்டத்தையே வெளிப்படுத்தி வருகிறார்.

ஜிம்பாப்வே தொடரில் 3 இன்னிங்ஸ்களில் வெறும் 11 ரன்கள் மட்டுமே எடுத்த அவர், இங்கிலாந்துக்கு எதிரான 5 போட்டிகளில் 131 ரன்கள் (சராசரி 26.2) மற்றும் அயர்லாந்துக்கு எதிரான 2 போட்டிகளில் 49 ரன்கள் (சராசரி 24.5) மட்டுமே எடுத்தார். மேலும், கடைசி 10 டி20 இன்னிங்ஸ்களில் ஒரே ஒரு அரைசதம் மட்டுமே பதிவு செய்துள்ளார்.

டி20 உலகக்கோப்பைக்கு முன்பு 37.05 ஆக இருந்த அபிஷேக் சர்மாவின் பேட்டிங் சராசரி, உலகக்கோப்பைக்குப் பிறகு 19.4 ஆக குறைந்துள்ளது. அதேபோல், அவரது ஸ்டிரைக் ரேட்டும் 195இல் இருந்து 165 ஆக சரிந்துள்ளது.

இந்நிலையில், பஞ்சாப் உள்நாட்டு போட்டி அபிஷேக் சர்மாவுக்கு மீண்டும் தன்னம்பிக்கையை அளிப்பதுடன், சர்வதேச கிரிக்கெட்டிலும் பழைய அதிரடி பார்முக்கு திரும்புவதற்கான முக்கிய வாய்ப்பாகவும் அமையும் என்பது ரசிகர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.